RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21218

OPEN ACCESS

# சிற்பி கவிதைகளில் மனிதநேயச் சிந்தனைகள்

ரெ. இராதிகா [அ, *]

[அ] தமிழ்த்துறை, திருவள்ளுவர் மாதிரி, உறுப்புக் கல்லூரி, திட்டக்குடி-606106, இந்தியா

# Humanistic Thoughts in Sirpi Poems

R. Radhika [a, *]

[a] Department of Tamil, Thiruvalluvar university Model constituent College of Arts & Science, Tittagudi, Cuddalore –606 106, India.

* Corresponding Author: Rrpr10913@gmail.com

Received : 27-01-2021
Revised : 02-04-2021
Accepted : 11-04-2021
Published : 30-04-2021

Check for updates

**ABSTRACT**

The one who creates is a human. The mind is a mix of thought, perspective, emotion, determination, and imagination, reflecting a state of knowledge and feeling. Proverbs like 'Where there is a mind, there is a path,' and 'If the mind is pure, no magic is needed' emphasize the greatness of the mind. Every human being born in such a human form should convey love to every person they encounter in their lives. One should grow with qualities that transcend caste, religion, race, and language, and help others to live. This is the main purpose of life. Throughout the ages, Tamil scholars have worked for human development. They praised and nurtured humanity. In particular, poets have presented a humane social perspective. Poet Sirpi has embodied humanity in each of his creations, which continue to be celebrated by humankind even today. They stand as support to uplift humanity. They guide toward human development. This essay explores the humanity and human creations that are seen both broadly and deeply in Sirpi's poetic works.

**Keywords:** Poet Sirpi, Human Development, Humanity, Sirpi Poems

## முன்னுரை

மனம் படைத்தவன் மனிதன். மனம் என்பது சிந்தனை, நோக்கு, உணர்ச்சி, மன உறுதி, கற்பனை ஆகியவற்றில் வெளிப்படுகின்ற அறிவு மற்றும் உணர்வு நிலை சார்ந்த அம்சங்களின் தொகுப்பாகும். 'மனம் இருந்தால் மார்க்கம் உண்டு', 'மனமது செம்மையானால் மந்திரம் தேவையில்லை' முதலிய பழமொழிகள் மனத்தின் சிறப்பை உணர்த்துகிறது. அத்தகைய மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் சந்திக்கும் ஒவ்வொருவரிடமும் அன்பு செலுத்துதல் வேண்டும். சாதி, மதம். இனம், மொழி கடந்து பிறருக்காக வாழும் பண்புகளோடு வளர வேண்டும். பிறரையும் வாழ்விக்க வேண்டும். இதுவே வாழ்வின் முக்கிய நோக்கமாக இருக்கிறது.

காலந்தோறும் மானுட மேம்பாட்டிற்காகத் தமிழ் ஆன்றோர் பல்லோர் பாடுபட்டனர். மானுடவியலைப் போற்றி வளர்த்தனர். குறிப்பாகக் கவிஞர்கள் மனித நேயமிக்க சமூகப் பார்வையைச் செலுத்தினார் கவிஞர் சிற்பி தம் ஒவ்வொரு படைப்பிலும் மனித நேயத்தையே பொருண்மையாக வைத்துப் படைத்துள்ளார். அவை இன்றளவும் மானுடம் போற்றும் படைப்புகளாகத் திகழ்கின்றன. மனித குலம் தழைக்க துணை நிற்கின்றன. மானுட வளர்ச்சிக்கு வழிகோலுகின்றன. சிற்பியின் கவிதைப் படைப்புகளில் பரவியும் விரவியும் காணப்படும் மனித நேயமும் மாந்தர் படைப்பும் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

## மனித நேயம் - பொருள் விளக்கம்

மனித நேயம் என்பது நாடு, இனம், மொழி என்ற எல்லைகளைக் கடந்து நிற்பது, மனித இனத்தின் நாகரிகப் பண்பாட்டு வளர்ச்சியோடு பிணைந்து நிற்பது. அஃது ஓர் உயரிய பண்பாடு. இப்பண்பாட்டினால் மக்களிடையே அன்பு வளரும், ஏற்றத்தாழ்வுகள் நீங்கும். ஒப்புரவு நிலைக்கும். மனித ஆற்றல்கள் உயரும். மனித மதிப்புகள் போற்றப் பெறும். உலக மக்களிடையே ஒற்றுமை ஓங்கும். மானுடம் போற்றுவதே மனித நேயம் எனப்படும்.

## சிற்பியின் மனித நேயம்

மனிதனிடத்தில் அவசியம் இருக்க வேண்டிய பண்புகளில் மிக முக்கியமானப் பண்பு மனிதநேயமாகும். மனிதப் பண்பு இல்லாவிட்டால் மனிதன் மிருகத்தைவிட மோசமான நிலையை அடைவதை அன்றாட வாழ்வில் அதிகமாகக் கண்டு வருகிறோம். இறைவன் மனிதனுக்குப் பயன்படக்கூடிய உறுப்புகளை ஏற்படுத்தி வெறும் உடலாக மட்டும் அவனைப் படைக்கவில்லை. உலகம் இயங்க வேண்டும் என்பதற்காக உடலுடன் பல நல்ல குணங்களையும் தன்மைகளையும் சேர்த்தே மனிதனை உருவாக்கியுள்ளான். அத்தகைய மனிதனின் குணங்களைச் சிற்பியின் கவிதைகள் எடுத்துரைக்கின்றன. கவிஞரின் உள்ளுயிர் வெளிப்பாடாக இருக்கும் மனிதநேயத்தை அவர்தம் கவிதைகள்வழி உணரமுடிகிறது.

## மனித நேயக் கருவி - கவிதை

கவிதையின் பயன் இன்புறுத்துவதும் அறிவுறுத்துவதுமாகும். கவிதையைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. கவிதையைப் பற்றி, “கவிதை என்பது கவிஞன் பிறரிடம் தன் கருத்துகளைச் சொல்வதற்காகப் பயன்படுத்தும் பரிவர்த்தனை சாதனம்" (இளசைமணியன் (தொ.ஆ), புதுமைப்பித்தன் பற்றி ரகுநாதன் ப.7.) என்கிறார் ரகுநாதன். ஆனால், சிற்பி கவிதையும் மனித நேயமும் ஒன்றெனக் கூறுகிறார்.

## மனித நேய மையம் - வானம்பாடி

வானம்பாடி இதழ் 1971 ஆம் ஆண்டு அக்டோபரில் ஆரம்பிக்கப்பட்டது. 1983 செப்டம்பர் வரை இயங்கியது. 22 இதழ்களோடு நின்று போனது. 221 கவிஞர்கள் எழுதிய 491 கவிதைகள் வெளியிடப்பட்டுள்ளன மனித நேயத்தையே மையமாகக் கொண்டு வானம்பாடி இயக்கம் இயங்கியிருக்கிறது. இதனை, “மனித நேயமிக்க சமூகப் பார்வையும், சமூக மாறுதல்களை விரும்பும் முற்போக்கு உள்ளடக்கமும் வானம்பாடி என்ற கவிதை ஏடு வெளிவந்த போது அழுத்தமாக வெளிப்பட்டது. கலை நயமும் அகவயமாக விளைந்த புறப்பார்வையும் கொண்ட கவிஞர்களாக சிற்பி, மு. மேத்தா, மீரா, புவியரசு, கங்கை கொண்டான், தேனரசன்,சக்திக்கனல்,சிதம்பரநாதன், தமிழ் நாடன் ஆகியோர் தெரிய வந்தனர்"(பாலா, புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை. ப.173.) என்று பாலா கூறுவதிலிருந்து அறிய முடிகின்றது.

## மனித உறவுகளைப் பேணும் சிற்பி

மனித குலம் அழிந்து விடாமல் தழைத்தோங்க உறவுகளே காரணமாக அமைகின்றன. மண்ணையும் மனித உறவுகளையும் பற்றி சிற்பியின் பல்வேறு கவிதைகள் பேசுகின்றன. அவை. பாப்பாவின் கேள்வி, மௌனத்திரை. சீறத்தெரியாத எங்கள் ஊர்ப் பாம்புகள், எங்கள் கிராமம், என் மரம், கதவு, பூவே பூ புளியம் பூ, என் இரும்புக் குதிரை, நேசம், முற்பகல் செய்யின், புதருக்குள் பூத்த மலர், ஒரு கிராமத்து நதி, தெற்கு வளவுப் பாட்டையா, மாப்பிள்ளைக் கவுண்டர். ஓடு ஓடு சங்கிலி, இளம்பருவத் தோழன், பெல்ஜியம் கண்ணாடி. பாடம் சொன்னவர்கள், ஊமையன்.

அக்கம்மா, அக்கா,மாசாணி,தேவகிக்குட்டி. தம்பி உனக்காக. கவிகாளியப்பா, அம்மணி. ஒரு சகோதரரின் மரணம். அம்மா நவீனமாகிவிட்டாள். தண்ணீர்ச் சிநேகிதங்கள். வாழ்கிறாள் அம்மா. நேரம். மாதங்கி கேட்கிறாள் முதலிய கவிதைகளாகும்.

படைப்பும் படைப்பாளியும் கொண்டுள்ள உறவே படிப்பவனின் உள்ளத்தை, உணர்வுகளைப் படைப்பில் ஈடுபாடு கொள்ளச் செய்கிறது. படைப்பாளி தான பிறந்த மண்ணின் மீதும், உறவுகளின் மீதும் கொண்டுள்ள நம்பிக்கையை, அன்பை தன் எழுத்துக்களில் பிரதிபலிக்கிறான். உறவு முறைகள் தொய்வடைந்து விலகி, தனித்து வாழும் இன்றைய காலகட்டத்தில் உறவுகளின் மேம்பாட்டையும் உறவுகளைப் பேணும் வழிமுறைகளைப் பற்றியும் கவிஞர் தம் கவிதைகளில் பதிவு செய்துள்ளார்.

ஒவ்வொரு மனிதனும் சமுதாயப் பற்று கொண்டு வாழும் போது மனிதம் பாதுகாக்கப்படும். சமுதாய உறவு பலப்படும். தனி மனித நலனிலிருந்து மாறி சமுதாயப் பார்வையைச் செலுத்த வானம்பாடி இயக்கம் முன் வந்தது. அவ்வியக்கத்தில் சிற்பியின் சமூக உயர்வுக்கான பங்களிப்பு முக்கியமானதாகும்.

## நண்பர்கள் உறவு முறை

ஒரு மனிதன் குடும்பத்தை விட்டு வெளியே வரும் போது பல்வேறு சூழலில் நட்பு ஏற்படுகிறது. நாளடைவில் நட்பு நெருக்கமாகி 'உயிர் கொடுப்பான் தோழன் எனும் நிலைக்கு உயர்கிறது. பிறகு. வாழ்வின் ஒவ்வொரு படிநிலையிலும் நண்பர்களின் உறவு முறை வளர்கிறது. 'புதருக்குள் பூத்த மலர் எனும் கவிதையை மறைந்த நண்பன் முத்து நினைவாக இயற்றியுள்ளார் சிற்பி பள்ளிப் பருவம் முதற்கொண்டு ஒருவர் மனதில் ஒருவர் நீங்கா நட்பை வளர்த்து வந்துள்ளதை நினைவுக் கூர்கிறார். அக்கவிதையில்,

நீ கற்றது பொறிஇயல்

நான் கற்றது இலக்கியம்

நீ சுற்றியது உலகம் முழுவதும்

நான் என சின்ன உலகத்தில்

நீ தொழில் நுட்ப வித்தகன்

நான் அதிகம் பேர் படிக்காத

கவிதைப் புத்தகமே" (க. இராமச்சந்திரன், தமிழ்க் கவிதையின் புதிய போக்குகள், ப.55.)

என்று இருவருக்குமுள்ள இணைபிரியா நட்பைப் பேசுகின்றார். அருட்செல்வர் நா. மகாலிங்கம் சிற்பியுடன் கொண்ட நட்பை. "அவருக்கும் எனக்கும் உள்ள நெடிய தொடர்பு இலக்கிய உறவு கொண்டது மட்டுமல்ல குடும்ப உறவும் கொண்டது. அவருடைய வாசிப்புத் திறனும், கல்வியறிவும். வாழ்க்கை அனுபவமும் ஒரு சிறந்த மானுட நேயராக அவரை வடிவமைத்திருக்கிறது. அந்த மானுட நேயம் தான் ஆன்ம நேயத்திற்கு முன்னோடியாகும்". (சிற்பி பவள விழா மலர், ப.3.) என்ற குறிப்பிடுகின்றார். இலக்கிய உறவுடன் சமுதாய உறவு கொண்ட மனிதநேயராக சிற்பி திகழ்வதைக் காண முடிகின்றது.

இளம்பருவத் தோழன்' எனும் கவிதையில் சாமியார்ப் பார்ப்பான் என்றழைக்கைப்படும் சம வயது சிநேகிதன் ஆறுமுகனின் நினைவுகளைப் பதிவு செய்துள்ளார்

சிற்பியின் நேசம் நிறைந்த நட்பை, "எங்களைப் போல் பாசம் கொண்ட நண்பர்களுக்கு ஒரு நெருக்கடி என்றால் இவரின் உதவும் கைகள் நீளும். எமக்கு ஒரு நலிவு என்றால் அவர் கண்கள் அருகமர்ந்து பார்த்திருக்கும் எம் இல்லங்களின் இன்பங்களிலும் துன்பங்களிலும் உற்ற உறவால்

அவர் எம்முடன் இருப்பார். சுருங்கச் சொன்னால், அவர் மனிதம் மலர்ந்து கமழும் ஒரு மலர்க்காடு" (சிற்பி பவள விழா மலர். ப.27) என்கிறார் இரணியன்

கவிஞரின் தூய நட்பை, “கலைமாமணி கவிஞர் சிற்பி அவர்கள் நாடறிந்த நல்ல தமிழ்க்கவிஞர். இனிய பண்பாளர். சிரித்த முகத்துடன் பழகும் சிறந்த நண்பர்"(சிற்பி பவளவிழா மலர், ப.35.)என்று எஸ் வயிரவன் குறிப்பிடுவதன் வழி, நண்பர்கள் உலகில் சிறந்த நண்பராகக் கவிஞர் விளங்குவதை அறியமுடிகிறது.

## சொந்த ஊரில் உள்ளோர் உறவு முறை

ஒவ்வொரு மனிதனும் குடும்பம். சொந்த ஊர், சமூகம், நாடு, உலகம் என்ற சிந்தனையோடு தன் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் மானுடம் காக்கப்படும். சிற்பி தன் சொந்த ஊரிலுள்ளோரை நேசித்துப் பழகிய அனுபவங்களைத் தம் கவிதைகளில் பேசியுள்ளார்

குடும்பத்தைப் பற்றி, “தேசமாவது குடும்பங்களின் தொகுதி. குடும்பங்கள் இல்லாவிட்டால் தேசம் இல்லை. தேசம் இல்லாவிடிலோ தேசியக் கல்வியைப் பற்றி பேச இடமில்லை"(பிரேமா அரவிந்தன், மகாகவி பாரதியார் பொன்மொழிகள்,ப.15.)என்று பாரதியார் கூறுவார். அத்தகையச் சிந்தனையோடு. தன் குடும்பத்தை மட்டும் குடும்பமாகப் சமுதாயத்தையே தன் ஒரு குடும்பமாக சிற்பி பார்க்கிறார். சொந்த ஊரிலுள்ளோரை தன் குடும்பமாக எண்ணி மகிழ்கிறார்.

## அஃறிணை உயிர்களின் சிநேகித உறவுமுறை

மனிதர்களை நேசிப்பவன் சிறந்த மனிதனாகக் கருதப்படுகிறான். அஃறிணை உயிர்களை நேசிப்பவன் மகானாக போற்றப்படுகிறான். ஆறறிவு உயிர்களை நேசிப்பதைப் போலவே அஃறிணை உயிர்களையும் சிற்பி நேசிக்கிறார். சிநேகிதம் கொள்கிறார். இதனை அவர்தம் கவிதைகள் வெளிப்படுத்துகின்றன. 'நேசம்" எனும் கவிதையில் குற்றாலத்திலிருந்து கொண்டு வந்த ஒரு பூச்செடியின் மீது அன்பைச் செலுத்தும் சிற்பியின் மனிதநேயத்தை,

விடியற் காலையில்
ஜன்னல் வழியே முகம் நீட்டி
நலம் விசாரிக்கும்
வெளியே புறப்படும்போது
பூங்கொத்தும் கையுமாய்
முறுவலித்து வழியனுப்பும்" (சிற்பி. சி.க.தொ.1. ப.686.)

எனும் கவிதை மூலம் காணமுடிகிறது.

என் இரும்புக் குதிரை' எனும் கவிதையில்,

பாரம் சுமக்கவென்று
குதிரையொன்று வாங்கினேன்
இரும்புக் குதிரை!
என் உறவு அதன் உறவு
என் நட்பு அதன் நட்பு"(சிற்பி. சி.க.தொ.1. ப.665)

என்று குதிரையுடன் நட்பும் உறவும் கொள்வதைக் காணமுடிகிறது. தணணீர் சிநேகிதங்கள்" எனும் கவிதையில் மீன்களின் வகைகளையும் மீன்களிடம் நட்புக் கொள்வதையும்,

சின்ன வயதில்

சிற்றாறு கூட்டி வைத்த

என் தண்ணீர்ச் சிநேகிதங்கள்

ஓடும் நதிமீன் பண்ணையில்

ஒரு மீன் அடிவயிறு மிதக்கச்

செத்து மிதந்தாலும்

அன்றைக்கு முழுப் பட்டினி நான்"(சிற்பி, சி.க.தொ.2, ப.1400.)

என்கிறார் ஆகவே, அஃறிணை உயர்களின் மீதும் அன்பு செலுத்தும் கவிஞராக சிற்பி திகழ்வதை அறியமுடிகிறது.

## இயற்கைக்கும் மனிதனுக்குமான உறவுமுறை

'மனிதனும் இயற்கையும்' எனும் கவிதையை அறிவியல் பார்வையோடும். இயற்கையோடு மனிதன் உரையாடுவதைப் போலவும் அமைத்துள்ளார்.

வென்றுவிட்டேன் உன்னைவென்று விட்டேனென்று

வீரக்குரல் கொடுத்தான் அன்பைக்

கொன்றுவிட்டாய் இன்பம் கொன்று விட்டாயென்று

கூவியழுதனள் தாய்"(சிற்பி, சி.க.தொ.1, ப.131)

என இயற்கையன்னையிடத்தில் மனிதனின் உறவு உள்ளதை எடுத்துரைக்கிறார். இயற்கையை அழித்து செயற்கை வாழ்வு வாழும் மனிதன் அன்பையும் இன்பத்தையும் கொன்றுவிட்டானென்று இயற்கையன்னை அழுவதாகச் சுட்டிக் காட்டுகிறார். சிற்பி தியாக உள்ளத்தோடு இயற்கையை நேசிப்பதை, "நாடும் காடும் ஒன்றாகக் கருதுகிற சமநிலை உள்ளம், தியாகத்தில் இதற்கு நிகர் இல்லை என்ற எல்லை கண்டபோது மானுடம் வெல்கிறது"(சொ சேதுபதி (தொ.ஆ), கவிஞர் சிற்பி துளிகளில் ஒளிரும் துளிகள், ப.241)எனும் கூற்று மெய்ப்பிக்கிறது.

## மரணம் என்னும் உறவின் இறுதிநிலை

ஒவ்வொரு மனிதனும் மரணம் என்னும் நிலையைக் கடந்தாக வேண்டும். வாழ்க்கையென்பது ஒரு நிலையாமை என உணர வேண்டும் 'மரணத்தைப் பற்றிச் சிந்திப்பவன் வாழத் தொடங்குகிறான். என்று செர்மானியப் பழமொழி உரைக்கிறது சிற்பி மூப்பு, இறப்புச் சிந்தனைகளைத் தம் கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார். வாழ்வில் எந்தச் சூழலிலும் மரணம் நிகழலாம் வாழ்நாட்களைச் சரியாக வாழ வேண்டும் எனச் சிற்பி வேண்டுகிறார் உயிரே உயிரே', 'மாண்ட பின்னர்'. 'கல்லறைக் கன்னி', 'மரணம் விளையாடும் மண்', 'அழகின் அலங்கோலம்', 'மயானபூமி', 'ஒரு விலைமகளின் கல்லறை', 'மயான சத்தியங்கள்'. 'ஒரு கடிகாரத்தின் மரணம்'. 'தண்ணீரின் மரணம்' ஆகிய கவிதைகளில் சிற்பி வாழ்க்கை நிலையாமையைப் பற்றி விளக்கியுள்ளார் சிற்பி.

'மயான பூமி' எனும் கவிதையில் தன் ஊரிலுள்ள மயான பூமியோடு கவிஞர் பேசுகின்றார் மயான பூமி மண்ணே! வாழ்வினை நோக்கி ஓயா அழைப்பை வழங்கிடும் காதல் கண்ணே எனப்

பாடுகின்றார் மயான பூமி எத்தனையோ சிரிப்பையும், வெறுப்பையும், தவநெருப்பையும் மூடிமறைத்ததாகக் கூறுகிறார். மேலும்.

வேதனை எழுதி

விம்மலை எழுதி

விதிக்கொரு முடிவெழுதி

காதலை எழுதிக்

கண்ணீர் எழுதிக்

களிக்குமுன் வருவேனோ?

நதிகளைப் பாடி

நானிலம் பாடி

நாயக மானிடனார்

மதிவலம் பாடி

வான்புகழ் பாடி

முடிக்குமுன் வருவேனோ?( சிற்பி, சி.க.தொ.1. ப.290.)

என்று எப்பொழுது தன் இறப்பு நிகழுமென வினவுகின்றார். உறவுகள் எல்லாம் ஒருநாள் பிரிவிடும் கயிறாய் உதிர்ந்திடும். நிழல்போல் தொடரும் மரணத்தைப் பற்றிய சிந்தனை நமக்கு வேண்டுமென்கிறார்.

## முடிவுரை

மனித குலம் தழைக்கவும் மானுட வளர்ச்சிக்கும் சிற்பியின் பல்வேறு கவிதைகள் துணை நிற்கின்றன. மனித உயிர்களின் துன்பத்தை நீக்க வேண்டுமென்று ஒவ்வொருவரின் மனதில் எழும் உணர்ச்சியே மனிதநேயமாகும். இது மனித ஆற்றல்கள் உயரவும், உலக மக்களிடையே ஒற்றுமை ஓங்கவும். மனித உரிமை காக்கவும், மானுடம் போற்றவும் செய்கிறது. சமூகத்தில் மறைந்து கிடக்கிற மனித நேய ஊற்றுக்களைக் கண்டடைகிற கவிதை முயற்சியையும், சமூக மாறுதல்களை விரும்பி தன் வாழ்க்கைப் பயணத்திலிருந்தும் மனிதநேயப் பாதையிலிருந்தும் சிறிதும் விலகாத அன்பு உள்ளத்தையும் அறநெறி வழுவா உள்ளுயிர் வெளிப்பாட்டையும் சிற்பியின் கவிதைகள் வழி அறியமுடிகிறது. மண்ணையும், மனித உறவுகளையும் பற்றி பல்வேறு கவிதைகள் பேசுகின்றன. மனித வாழ்வில் இன்பங்களிலும் துன்பங்களிலும் துணை நிற்கும் உண்மையான உறவுகளை சிற்பி வெளிப்படுத்தியுள்ளார்.

## References

Bala, (1981) New Poems A New Perspective, Akaram Publication, Thanjavur, India

Kailasam Maniyan, (2005) about Pudhumaipiththan, Raghunathan, New Century Book House (P) Ltd, Chennai, India

Prema Aravindan, (2012) Mahakavi Bharathiar's Golden Words, Chennai Books, Chennai, India

Sirpi (2011a) Sirpi Poems Volume-1, New Century Book House (P) Ltd, Ambattur, Chennai, India

Sirpi (2011b) Sirpi Poems Volume 2, New Century Book House (P) Ltd, Ambattur, Chennai, India

So. Sethupathi (2007), Poet Sirpi's Droplets that Shine in Droplets, Kavitha Publication, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License